**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | **Case No.CC.No.176 of 2020** |
| **Preliminary Register** | **:** | |
| **Sessions** | **:** | |

**Deposition of Witness for** **Prosecution** **PW1**

**Defence**

**Name** : **ரவி**

**Father's/ Husband Name :** **தர்மராஜ்**

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.01.2021.**

**முதல் விசாரணை**

நான் ஆங்கரையில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். தேங்காய் வெட்டும் வேலைக்கும் செல்வேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது 3 பிள்ளைகள் உள்ளனர். எனது தகப்பனார் இறந்துவிட்டார். எனது தகப்பனார் இறந்த

பின்னர் எனது தாயார் தமிழரசி என்னுடன் தான் வசித்து வந்தார். எனது அம்மா தமிழரசி ஆங்கரையில் உள்ள கல்யாணி கேஸ் கம்பெனியில் கூட்டும் வேலை செய்து வந்தார். 26.06.2020 அன்று காலை 6 மணிக்கு வழக்கம்போல் கேஸ் கம்பெனிக்கு கூட்டி பெருக்க சென்றுவிட்டு, வேலை முடித்து வீட்டிற்கு வருவதற்காக இலால்குடி டூ திருச்சி மெயின்ரோட்டை கடப்பதற்காக நடந்து வந்தார். அந்த சமயத்தில் நான் அருகில் உள்ள ரெங்கன் டீ கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது மணக்காலிலிருந்து திருச்சி நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு இருசக்கர வாகனம் எனது அம்மாவின் மீது மோதியது. அடிப்பட்ட எனதுஅம்மாவை ஆம்புலன்ஸ் மூலம் இலால்குடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் அம்மாவின் மீது மோதிய இருசக்கர வாகனத்தை மணக்காலை சேர்ந்த அர்ஜுன் என்பவர் ஓட்டி வந்ததாக பின்னர் தெரிந்துகொண்டேன். மேற்படி நபரை அந்த நேரத்தில் நான் பார்க்கவில்லை. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த எனது அம்மா 6 நாள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து குறித்து இலால்குடி போலிசார் திருச்சி அரசு மருத்துவமனைக்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து குறிதது போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கு.வி - இல்லை.